# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2176/4 - 2020 මැයි මස 18 වැනි සඳුදා - 2020.05.18

*2176/4 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் கட்டளை*

*மேல் மாகாணத்தின் ஆளுநர் றொஷான் குணதிலக ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் இரண்டாவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க பின்வரும் காரணங்கள்/குற்றச்சாட்டுக்கள் காரணமாக திரு. எஸ். ஏ. என். கே. சகலசூரிய அவர்கள் திவுலப்பிட்டிய பிரதேச சபையின் தலைவராகச் செயற்பட்டபோது மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 185(1) ஆம் உப பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள தவறுகளை இழைத்துள்ளாரா எனப் பரிசோதித்துப் பார்த்து 3 மாதத்தினுள் அறிக்கை ஒன்றை முன்வைப்பதற்காக தனிநபர் ஆணைக்குழு ஒன்றாக ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி திரு. சந்திரதாச நாணாயக்கார அவர்களை நியமிக்கின்றேன்.*

*திவுலப்பிட்டிய பிரதேச சபையின் தலைவர் திரு. எஸ். ஏ. என். கே. சகலசூரிய அவர்களுக்கு உரியதாக பரிசோதித்துப் பார்க்க வேண்டிய காரணங்கள்/குற்றச்சாட்டுக்கள் இருந்தால் அக்குற்றச்சாட்டுக்கள் எவை எனவும்,*

(i) *திவுலப்பிட்டிய பிரதேச சபையின் தலைவராக செயற்பட்டபோது 2020.03.30 ஆந் திகதி தொடக்கம் 2020.04.08 ஆந் திகதி வரையிலான கால எல்லையினுள் அல்லது அதற்கு அண்மித்த கால எல்லையினுள் திவுலப்பிட்டிய பிரதேச சபையின் பொது நிதியில் இருந்து பெறப்பட்ட முற்பண நிதியினைப் பயன்படுத்தி அரசின் கட்டுப்பாட்டு விலையினை விட கூடிய விலையில் பருப்பு மற்றும் மீன் ரின்னினை தனியார் விற்பனை நிலையம் ஒன்றில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்து 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185(1)(இ) அத்துடன்/அல்லது 185(1)(உ) பிரிவு/பிரிவுகளின் கீழ் வரக்கூடிய தவறொன்றை இழைத்தமை.*

(ii) திவுலப்பிட்டிய பிரதேச சபையின் தலைவராக செயற்பட்டபோது 2020.03.30 ஆந் திகதி தொடக்கம் 2020.04.08 ஆந் திகதி வரையிலான கால எல்லையினுள் அல்லது அதற்கு அண்மித்த கால எல்லையினுள் பிரதேச சபையின் நிதியத்தின் நிதியைப் பயன்படுத்தி கொள்வனவு செய்த பருப்பு மற்றும் மீன் ரின்னினை கட்டுப்பாட்டு விலையினைவிட கூடிய விலைக்கு பாவனையாளர்களான மக்களுக்கு விற்பதற்கு நடவடிக்கை எடுத்து 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185(1)(இ) அத்துடன்/185(1)(உ) பிரிவு/பிரிவுகளின் கீழ் வரக்கூடிய தவறொன்றை இழைத்தமை.

(iii) நீங்கள் திவுலப்பிட்டிய பிரதேச சபையின் தலைவராக செயற்பட்டபோது 2020.03.30 ஆந் திகதி தொடக்கம் 2020.04.08 ஆந் திகதி வரையிலான கால எல்லையினுள் அல்லது அதற்கு அண்மித்த கால எல்லையினுள் "COVID-19" வைரசை ஒழிப்பதற்காக மக்களுக்கு அத்தியாவசியமான பாவனைப் பொருட்களை வழங்குதல் தொடர்பாக மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ள LGD/2A/பொது ஆம் இலக்க, 2020.03.24 ஆந் திகதிய சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கு முரணாக திவுலப்பிட்டிய பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் அரசின் கட்டுப்பாட்டு விலையை மீறி உணவுப் பொருட்களை விற்பதற்கு நடவடிக்கை எடுத்து 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185(1)(இ) பிரிவின் கீழ் வரக்கூடிய தவறொன்றை இழைத்தமை.

மேலும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185(2) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணையாளர் ஒருவருக்குரிய அதிகாரம் இந்த தனிநபர் ஆணைக்குழுவிற்கு உரித்தாகுவதுடன், மேற்கூறப்பட்ட விடயங்களைப் பரிசோதித்துப் பார்க்கும்போது உரியதாக்கிக் கொள்ள வேண்டும் என இனங்காணப்பட்ட எழுத்துமூல மற்றும் வாய்மூல சாட்சிகள் பின்வரும் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதனை அறியத்தருகின்றேன்.

மேலும், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் இரண்டாவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185(3) ஆம் உப பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க திவுலப்பிட்டிய பிரதேச சபையின் தலைவர் திரு. எஸ். ஏ. என். கே. சகலசூரிய அவர்கள் அந்த தவிசாளர் பதவியினை வகிப்பது மேற்கூறிய விசாரணையின் கீழ் 2020, மே மாதம் 20 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருமாறு இங்கு இடைநிறுத்தப்படுவதாக இங்கு அறிவிக்கின்றேன்.

மேலும், மேற்கூறிய 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் இரண்டாவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185(3) ஆம் உப பிரிவின் கீழ் மேலும் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கிணங்க, அவ்வாறு இடைநிறுத்தப்படும் திவுலப்பிட்டிய பிரதேச சபையின் தலைவர் பதவியின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், விடயங்களை மேற்கொள்வதற்கும் திவுலுபிட்டிய பிரதேச சபையின் பிரதித் தலைவர் திரு. ரீ. ரீ. இந்திக ஜயசிங்க அவர்களுக்கு இங்கு கட்டளை இடுவதாக மேலும் அறிவிக்கின்றேன்.

**றொஷான் குணதிலக,**
ஆர்டப்பீ அன்ட் கார் வீஎஸ்வீ யூஎஸ்பி
பீஎச்டி எப்ஜஎம் (ஸ்ரீலங்கா) என்டிசீ பீஎஸ்சீ
விமானப் படையின் மார்ஷல்,
ஆளுநர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண ஆளுநர் அலுவலகம்,
மேல் மாகாண சபைக் கட்டடம்,
பத்தரமுல்லை,
2020, மே 18.

மேற்கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய எழுத்துமூல சாட்சிகள் :

1. திவுலப்பிட்டிய பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டின் முற்பண ஏடு
2. திவுலப்பிட்டிய பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டின் நிதி மற்றும் கொள்கைக் குழுவின் ஆவணத்தின் இறுதிப் பக்கங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளின் பிரித்தெடுப்புக்கள்
3. திவுலப்பிட்டிய பிரதேச சபையின் 511 ஆம் இலக்க உறுதிச்சீட்டு மற்றும் 2020.03.28 ஆந் திகதிய உறுதிச்சீட்டு இணைப்புடன்
4. திவுலப்பிட்டிய பிரதேச சபையின் 510 ஆம் இலக்க உறுதிச்சீட்டு மற்றும் 2020.03.28 ஆந் திகதிய உறுதிச்சீட்டு இணைப்புடன்

5. திவுலப்பிட்டிய பிரதேச சபையின் 512 ஆம் இலக்க உறுதிச்சீட்டு மற்றும் 2020.03.30 ஆந் திகதிய உறுதிச்சீட்டு இணைப்புடன்
6. திவுலப்பிட்டிய பிரதேச சபையின் 532 ஆம் இலக்க உறுதிச்சீட்டு மற்றும் 2020.04.08 ஆந் திகதிய உறுதிச்சீட்டு இணைப்புடன்
7. திவுலப்பிட்டிய பொதுச்சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வழங்கப்பட்ட 6644 ஆம் இலக்க மற்றும் 2020.03.28 ஆந் திகதிய விற்பனைப்பத்திரத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியின் பிரித்தெடுப்பு
8. திவுலப்பிட்டிய பொதுச்சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வழங்கப்பட்ட 6632 ஆம் இலக்க மற்றும் 2020.03.27 ஆந் திகதிய விற்பனைப்பத்திரத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியின் பிரித்தெடுப்பு
9. மாலிந்த ஸ்ரோர்ஸ், திவுலப்பிட்டிய தாபனத்தினால் வழங்கப்பட்ட பருப்பு உள்ளடங்கலாக உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்குரிய 2020.03.30, 2020.03.31, 2020.04.04 மற்றும் 2020.04.08 ஆந் திகதிகளின் 4 பற்றுச்சீட்டுக்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள்
10. திவுலப்பிட்டிய பிரதேச சபையின் 2020.03.28 ஆந் திகதிய நிதி மற்றும் கொள்கைக் குழுவின் அறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளின் பிரித்தெடுப்புக்கள்
11. 2020.04.28 ஆந் திகதி ரூபா 4,00,000 முற்பணத்தினைத் தீர்த்த திவுலப்பிட்டிய பிரதேச சபையின் 76452 ஆம் இலக்க பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியின் பிரித்தெடுப்பு
12. திவுலப்பிட்டிய பிரதேச சபைக்குரிய லொறியில் அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்வதற்குரியதான கோப்பு
13. இலங்கை பாவனையாளர் சேவைகள் அதிகார சபையின் தலைவரின் 2020.04.16 ஆந் திகதிய அறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியின் பிரித்தெடுப்பு

மேற்கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய வாய்மூலமான சாட்கள் :

| பெயர் | | பதவி |
|---|---|---|
| 1. திருமதி எம். சாந்தி சந்திரலதா | - | செயலாளர், திவுலப்பிட்டிய பிரதேச சபை |
| 2. திருமதி எஸ். டி. கே. டி. சதரசிங்க | - | முகாமைத்துவ உதவியாளர், திவுலப்பிட்டிய பிரதேச சபை |
| 3. திரு. எம். பீ. முதித திவாகர சுபசிங்க | - | வேலை/துறை தொழிலாளி, திவுலப்பிட்டிய பிரதேச சபை |
| 4. திரு. ஐ. ஏ. தனஞ்சய | - | வேலை/துறை தொழிலாளி, திவுலப்பிட்டிய பிரதேச சபை |
| 5. திரு. எம். பீ. டபிள்யூ. ஜீ. குணவர்தன | - | பிரதான முகாமைத்துவ உதவியாளர், திவுலப்பிட்டிய பிரதேச சபை |
| 6. பீ. பீ. ரன்தீம கயான் | - | சாரதி, திவுலப்பிட்டிய பிரதேச சபை |
| 7. கே. இசுரு சாமாக | - | சுகாதாரத் தொழிலாளி, திவுலப்பிட்டிய பிரதேச சபை |
| 8. பொது முகாமையாளர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரம்பெற்ற அலுவலர் | - | ம/ப திவுலப்பிட்டிய பொதுச்சேவைக் கூட்டுறவுச் சங்கம் |
| 9. தவிசாளர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரம்பெற்ற அலுவலர் | - | இலங்கை பாவனையாளர் சேவை அதிகார சபை |
| 10. ஈ. சீ. எம். சத்துராங்கனி | - | புலன் விசாரணை உத்தியோகத்தர், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், கம்பஹா மாவட்டம் |

5-32

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.